**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.52 /2022**
**Deposition of witness of Defendant – D.W.2(ராமசாமி)**
**27.8.24**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனக்கு மாதுராப்பட்டி கிராமத்தில் சொந்தமாக தார்சு வீடு உள்ளது என்றால் சரிதான். வேறு மனைக்கட்டுகள் எதுவும் இல்லை. அந்த தார்சு வீட்டில் பூர்வீகமாக வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமான விவசாய நிலங்களை விற்றுவிட்டேன். எனக்கு சொந்தமாக 2–1/2 ஏக்கர் நிலம் இருந்தது. விராலிமலையில் புதுக்கோட்டை ரோட்டில் மனையிடம் எனது மனைவி பெயரில் வாங்கியிருந்தேன். அதை விற்று 3 வருடங்கள் இருக்கும். அந்த மனையிடத்தை 2016ல் வாங்கினேன். அதன் விஸ்தீர்ணம் 5–1/2 செண்ட். அந்த இடத்தை கொரோனா காலகட்டத்தில் விற்பனை செய்தேன். அந்த இடத்தை விற்பனை செய்யும் வரை அதன் மூல பத்திரம் என்னிடம் தான் இருந்தது. கிராமத்தில் இருந்த நிலத்தை விற்று 6,7 வருடங்கள் இருக்கும். கோகிலா என்பவரிடம் எனது மனைவி கடன் வாங்கியிருந்தார். உமாமகேஷ்வரி யின் கிரையப்பத்திரத்தை எனது மனைவி வாதியிடம் கொடுத்து கடன் வாங்கியதாக சொல்கிறேன். வாதியிடமிருந்து நான் கடன் எதுவும் வாங்கவில்லை. வாதியிடம் நான் பத்திரம் எதையும் கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.1ல் நான் வாதியிடம் கடன்வாங்கியதாகவும் அவரிடம் நான் தான் பத்திரம் கொடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் அதில் உள்ள கையெழுத்து மற்றும் எழுதப்பட்ட விவரங்கள் வாதியினுடையது அல்ல என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு வாதி எவ்வித கடனும் கொடுக்கவில்லை என்றும் வாதியிடம் எனது மனைவி எவ்வித மூல ஆவணங்களையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கேட்புக்கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்ததாகவும் பச்சை பேப்பரில் கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும் நிரூபனவாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கும் வாதிக்கும் இடையே எவ்வித கொடுக்கல் வாங்கலோ கடன் நடவடிக்கையும் இல்லை என்றால் சரியல்ல. கடன் பெற்றதாக சொல்லப்படும் தேதி , மாதம் , வருடம் எனது நிரூபனவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். பிரதிவாதி எனது மைத்துனரின் மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக ஆவணம் உற்பத்தி செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கான மூல ஆவணம் ஜாமினாக கொடுக்கப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**